# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No. : 412/2022**

**நாள் : 02.07.2025**

**ம.சா.1 திரு. வசந்த்** – சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சமயத்தில் எனது அப்பா ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் எனது அப்பாவிற்கு சொந்தமானது. விபத்து பற்றி நான் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது தகப்பனார் மோட்டார் சைக்கிளை மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டி சென்றார் என்று நான் கேள்விப்பட்டேன். விபத்து சம்பந்தமாக TN-02-AH-0697 என்ற கார் மோதி விபத்து ஏற்பட்டதாகத்தான் குற்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஓட்டுநரின் மீதுதான் குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிரதான மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் அந்த ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு எனது அப்பா எந்த வகையிலும் காரணம் கிடையாது என்றால் சரிதான். எனது அப்பா ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் 4ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெயரளவிற்கு தரப்பினராக 4ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், 4ம் எதிர்மனுதாரரிடம் நாங்கள் இழப்பீடு கோரவில்லை என்று சொன்னால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi